| O.S.No. 236/2017 | PW1 : திரு. ராமசாமி நாடார்<br>த/பெ. திரு. குருசாமி | 27-01-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. வழக்கு சொத்துக்களை மனைப்பிரிவு போட்டுதான் விற்பனை செய்தேன். ஒரு மனையை சதுர அடி ரூ.145/– என்று விற்பனை செய்தோம். அவ்வாறு விற்பனை செய்த பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் உள்ளேன். நான் மனையை சதுர அடி ரூ.145/–க்கு விற்கவில்லை என்றாலும், அதைவிட அதிகமான விலைக்கு விற்பனை செய்தேன் என்றாலும், அரசு வழிகாட்டு மதிப்பினை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

2. 2023–ம் ஆண்டு பிரதமர் அவர்கள் வாரணாசி தொகுதியில் நின்றார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் மகன்தான் வாரணாசி தொகுதியினுடைய உதவி கலெக்டராக இருந்தார். அவர்தான் தேர்தல் நடத்தும் பொறுப்பு அலுவலராக இருந்தார். எங்களுக்குள் சமரச கமிட்டி நடைபெற்றபோதும், வழக்கு சொத்துக்களை அளந்தபோதும், செய்யாறு உதவி கலெக்டராக பிரபு ஷங்கர் இருந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அதன் அடிப்படையில்தான் அளவீடுகளில் பிரச்சனை வந்தது என்றால் சரியல்ல, சாட்சியானர் அந்த சமயத்தில் பிரபு ஷங்கர் உதவி கலெக்டராக இல்லை என்றும், அதற்கு பிறகுதான் பிரபு ஷங்கர் உதவி கலெக்டராக வந்தார் என்றும் கூறுகிறார்.

3. எனது மருமகளும் IAS அலுவலர்தான். அந்த அழுத்தத்தின்பேரில்தான் செய்யாரில் இருந்த வருவாய்த்துறை அலுவலர்கள் எனக்கு சாதகமாக செயல்பட்டார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் அளவு சம்மந்தமான பிரச்சனைக்கு இந்த வழக்கினை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மொத்தம் 4 ஏக்கர் 90 சென்ட் அதில் நாங்கள் 4 ஏக்கர் 85 சென்ட்டைத்தான் கிரையம் வாங்கினோம். 1 ஏக்கருக்கு 5 சென்ட் Tamilnadu Survey and Boundaries Act -ன் படி error காண்பிக்கலாம் என்றாலும், அதன் அடிப்படையில் 25 சென்ட் error காண்பிக்கலாம் என்றாலும், அதன் அடிப்படையில்தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. அதனால், நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் உண்மையான விவரங்களை தெரிவிக்கவில்லை என்றாலும், ஆவணங்களை மறைத்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

4. 1986-ம் ஆண்டிலேயே சர்வேயர் வைத்து அளந்து எங்களுக்குண்டான 4 ஏக்கர் 85 சென்ட்டையும், பிரதிவாதிகளுக்குண்டான 5 சென்ட்டையும் அளந்து கொடுத்துவிட்டார்கள், அதனை சப் டிவிஷனும் செய்து விட்டார்கள். அவ்வாறு அளந்ததற்கு ஆதரமாகவும், சப் டிவிஷன் செய்யப்பட்டதற்கு ஆதரமாகவும் ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன். இந்த வழக்கில் அளந்ததற்கு சம்மந்தமான ஆவணத்தையோ, உட்பிரிவு செய்யப்பட்டதற்கு சம்மந்தமான ஆவணத்தையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. எங்களுக்கு உரிமையான அளவுகளுக்கு அதிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டதால்தான், ஏற்கனவே வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான், மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைக்கிறோம் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

(2, 3 பிரதிவாதிகள் ஆஜரில் இல்லை. 2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரும் ஆஜரில். 2, 3 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டதால் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**